**தலவாக்கலை லிந்துல நகர சபை - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலவாக்கலை லிந்துல நகர சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த விரிவான வருமானச் செலவினக் கணக்கு, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபை சட்டத்தின் (255 அதிகாரம்) 181(I) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தலவாக்கலை லிந்துல நகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.
என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நகர சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நகர சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் 1.6.1(அ) ஆம் பந்தியின் அவதானிப்பு தவிர முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது அறிக்கையில் சுட்டிக்காண்பித்த 1.2.1 (ஆ),(இ)(ஈ),(உ) உடைய கணக்கீட்டுக் குறைபாடுகளை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அடுத்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது இவ்வாறான தவறுகள் இடம்பெறாமல் இருக்க நடவடிக்கை எடுக்கின்றேன். | நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது தவறுகளை இனங்கண்டு சீராக்கங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 13 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதி மற்றும் அட்டவணைகள் அறிக்கைகளின் பிரகாரம் மீதிகளுக்கு இடையே ரூபா 19,474,675 ஆன வேறுபாடு ஒன்று இருந்தது. | குறித்த பிரிவுகளில் இருந்து சரியாக பெற்றுக் கொண்டு அடுத்த கணக்குகளை தயாரிக்கும் போது சீராக்கி சமர்ப்பிக்கின்றேன் | சரியான எண்ணிக்கைகளை உள்ளடக்கி நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 05 கணக்கு விடயங்களுக்குரிய ரூபா 3,364,914 கூட்டுத்தொகையான கணக்கு மீதிகள் காலப்பகுப்பாய்வு, வருமான அட்டவணைகள், பேரேட்டுக் கணக்குகள் மற்றம் நர்குறிப்பு பதிவுகள் இல்லாமையால் கணக்காய்வின் போது திருப்திகரமாக உறுதிப்படுத்த முடியவில்லை. | குறித்த பிரிவுகளில் இருந்து சரியாக பெற்றுக் கொண்டு அடுத்த கணக்குகளை தயாரிக்கும் போது சீராக்கி சமர்ப்பிக்கின்றேன். | அட்டவணைகள் முறையாக பராமரிக்கப்பட வேண்டியதுடன் போதியளவு சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் |

## 02. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 1,982,550 ஆக இருந்துடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 3,547,426 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரிப்பு செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **வீதவரியும் வரியும்** | | |
| அரச நிறுவனம் 01, தனியார் நிறுவனம் 01 என்பவற்றிலிருந்து மேல் கொத்மலை நீர்த்தேக்க நிர்மாணத்தின் போது ஆதனங்கள் இழந்தவர் களிடமிருந்து முன்னைய ஆண்டுகளில் அறவிடப்பட வேண்டிய 3 ஆண்டுகள் முதல் 10 ஆண்டுகள் வரையான காலமாக காணப்படும் ரூபா 1,237,549 ஆன நிலுவை வீதவரியை நகர சபை கட்டளைச் சட்டத்தின் 170(1) பிரிவின் பிரகாரம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமையால் வருமானம் சேகரிக்கும் செயலாற்றல் போதியளவில் காணப்படவில்லை. | நிலுவையை அறவடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நகர சபை விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

| | | |
|---|---|---|
| மாகாண சபையின் தலைமை செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 5,350,326 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 1,326,000 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சபையின் வருமான பரிசோதகர்களுக்கு ஆலோசணை வழங்கப்பட்டுள்ளது. | நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

நகர சபைகள் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முன்னைய ஆண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 02 ஆண்டுகள் முதல் 16 ஆண்டு வரையான காலப்பகுதியொன்று கடந்திருந்த நிர்மாணக் கடன்பட்டோரி டமிருந்தும், படகு வருமானம், வினோத வரி மற்றம் ஓய்வூதிய முற்பணம் என 04 கணக்கு விடயங்களின் கீழ் அறவிடப்பட வேண்டிய ரூபா 1,739,497 தொகையை மீளாய்வாண்டிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | சபை தீர்மானத்தின் பிரகாரம் அடுத்த கணக்குகளை தயாரிக்கும் போது சீராக்கி சமர்ப்பிக்கின்றேன். | பெறவேண்டிய மீதிகளை அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் கிடைத்திருந்த 17 கட்டிட விண்ணப்பங்களில் கட்டிட ஆராய்ச்சி நிலையத்தினால் அங்கீகாரம் வழங்குவதற்கு தாமதித்தமை, உரித்தினை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் இல்லாமை, கட்டிட திட்டத்தில் காணப்பட்ட குறைபாடுகள் காரணமாக நிர்மாணங்களுக்காக 05 விண்ணப்பங்களுக்கே நிர்மாணத்திற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தன. கட்டிட விண்ணப்பங்களுக்காக அங்கீகாரம் வழங்கும் போது பொதுச் சுகாதார பரிசோதகரின் பரிந்துரை பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் நடவடிக்கைகளுக்காக பொதுச் சுகாதார பரிசோதகருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | செயற்திறனாக செயற்பாடுகளை நிறைவேற்ற வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | சபை அலுவலகம் அமைந்துள்ள இடத்தின் முன் பக்கமாக மேல் கொத்மலை நீர்த்தேக்கத்திற்கு அண்மையில் பிரதான வீதியின் ஒரு பக்கத்தில் மேற் கொள்ளப்பட்டுள்ள 23 அத்துமீறிய வியாபார நிலையங்கள் (01 லொத்தர் கூடு, 14 சபையின் கடைகள், 08 சமூர்த்தி கடைகள்) தொடர்பாக எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப் பட்டிருக்கவில்லை. | சபையினால் அவ்வப்போது அத்துமீறிய நிமாணங்கள் தொடர்பாக கடை உரிமையாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது | அத்துமீறிய நிர்மாணங்கள் தொடர்பாக சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஈ) | பயன்பாட்டிற்கு எடுக்கப்படாத பேருந்து நிறுத்துமிடத்தின் மேல் மாடி மற்றும் மிடல்டன் உணவு விற்பனை நிலையம் என்பன 2015 திசெம்பர் 30 ஆந் திகதிய 2016/01 ஆம் இலக்க நிதி ஆணைக்குழு சட்டத்தின் சுற்றறிக்கையின் 1.1.6 பந்தியின் பிரகாரம் பொருத்தமான தரப்பினருக்கு கையளிக்க நடவடிக்கை எடுக்காமையால் 2021 பெப்ரவரி 12 ஆந் திகதி வரை வெளித்தரப்பினரின் சமூக விரோத செயல்களுக்கு பயன்படுத்தும் இடமாக மாறியிருந்தது. | பேருந்து நிறுத்து மிடத்தின் மேல் மாடியில் சிற்றுண்டிச் சாலை ஒன்றுக்காக இவ்வாண்டில் கேள்வி கோரிய போதும் அதற்காக எந்தவொரு வியாபாரியும் முன் வராமையால் மேல் மாடியை சுத்திகரித்து வெளித்தரப்பினர் நுழைய முடியாத வகையில் அமைப்பதற்கு திட்டமிடப்பட்டு வருகின்றது. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டியதுடன் சொத்துக்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்த வேண்டும். |
| (உ) | தொழில்நுட்ப உத்தியோகத்தரின் அறிக்கையின் பிரகாரம் நகர சபை பிரதேசத்தில் 40 நிரந்தர கட்டிடங்கள் மற்றும் 56 தற்காலிக வியாபார நிலையங்கள் என சபை அதிகாரப் பிரதேசத்தில் 96 அத்துமீறிய நிர்மாணணங்கள் காணப்பட்டன. இந்த நிர்மாணம் தொடர்பாக அத்துமீறிய நிர்மாணங்களை அகற்றுவதற்கு அல்லது சட்டரீதியாக்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படாமையால் சபைக்கு பாரியளவு வருமானமொன்று இழக்கப்பட்டிருந்தது. | இது தொடர்பாக விடய முகாமை சேவை உத்தியோகத்தர் அறிவுறுத்தப்பட்டு அத்துமீறிய நிர்மாணம் மற்றும் தற்காலிக நிர்மாணங்கள் தொடர்பாக சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | இது தொடர்பாக விசேட கவனமொன்றை செலுதி அத்துமீறிய நிர்மாணங்களை அகற்றுவதற்கு அல்லது சட்ட ரீதியாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் |
| (ஊ) | நகர சபையில் சேவையில் ஈடுபட்டுள்ள 2019 திசெம்பர் 30 ஆந் திகதி நுவரெலிய வலக் கல்வி அலுவலகத்திற்கு இடமாற்றம் பெற்றுச்சென்ற முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் ஒருவரால் பயன்படுத்தப்பட்ட உத்தியோகபூர்வ விடுதி அவர் சேவையிலிருந்து இடமாற்றம் பெற்று சென்று ஒரு | எதிர்காலத்தில் அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன். | உத்தியோகபூர்வ விடுதி தொடர்பாக சட்டரீதியான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

ஆண்டு 02 மாதங்கள் கடந்திருந்த போதும் மீள ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பாக இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் மற்றும் 2013 ஏப்ரல் 01 ஆந் திகதி கைச்சாத்திடட்ட உடன்படிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 பெப்ரவரி 12 ஆந் திகதி வரை வனிகசேகர கடை தொகுதியிலான 17 கடைகளும் குத்தகைக்கு வழங்கப்பட்டு திறக்கப்பட்டிருந்த 09 கடைகளில் 08 கடைகளின் வியாபாரிகளால் சபையுடன் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டிருக்கவில்லை. 2021 ஒக்தோபர் 31 வரை இந்நபர்களை அகற்றுவதற்கு அல்லது வேறு எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்க வில்லை. | குறித்த கடைகளுக்காக உடன்படிக்கை செய்த கடை உரிமையாளர்களால் வேறு நபர்களை ஈடுபடுத்தி வியாபாரம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | நிலுவை வருமானத்தை சேகரிக்க வேண்டியதுடன் உப குத்தகை வழங்குவதை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

# 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 4.1 சுற்றாடல் சிக்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கோழி இறைச்சி விற்பனைக்காக வழங்கப்பட்டிருந்த 04 மற்றும் 05 ஆம் இலக்க கடைகள் விலங்குளை கொல்லுமிடமாக மாற்றியிருந்தமை கொல்லப்பட்ட விலங்குகளின் எச்சங்கள் உட்பட கழிவுகள் அவ்விடத்திலேயே குவித்து வைக்கப்பட்டிருந்தமை அதன் காரணமாக சுற்றுபுற பிரதேசங்கள் அதிக துர்நாற்றத்துடன் சுடியதாக இருந்தமை 2021 பெப்ரவரி 09 ஆந் திகதிய பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. | வதைதடுப்பு கட்டளைச் சட்டத்தின் மூலம் நடவடிக்கை எடுப்பதற்கு சுகாதார கூட்டத்தின் போது தீர்மானிக்கப் பட்டுள்ளதுடன் உரிய இடத்தை சுத்திகரிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | விலங்குகளை கொல்லும் நடவடிக்கைகளை அவ்விடத்திலிருந்து அகற்ற வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 1988 இன் 56 ஆம் இலக்கம் மற்றும் 2000 இன் 53 ஆம் இலக்க சட்டங்களால் திருத்தம் செய்யப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டம் மற்றும் அதன் கீழ் அமுலாகும் பிரமாணங்களுக்கு இணங்க பாதுகாப்பு அனுமதிப்பத்தரங்கள் பெற்றுக்கொள்ள வேண்டிய 10 வியாபாரங்கள் 2021 பெப்ரவரி 11 ஆந் திகதி வரை அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளவில்லை. | வியாபாரங்களுக்காக சுற்றாடல் அனுமதிப் பத்திரங்களைப் விரைவில் வழங்க நடவடிக்கை எடுப்பேன். | தேசிய சுற்றாடல் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |